# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2498/04 - 2026 ජූලි මස 20 වැනි සඳුදා - 2026.07.20

2498/04 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் புத்தளம் மாநகர சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

புத்தளம் மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், புத்தளம் மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு.புஹாரி மொஹமது பர்வின் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமை உடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான புத்தளம் மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு.முஸ்தபா மொஹமட் இஷ்திசாம் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

புத்தளம் மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிறிநிவசகே லக்ஷித ருவன் ஜயநாயக்க ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1)(ஆ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திரு.முஸ்தபா மொஹமட் இஷ்திசாம் என்பவர் புத்தளம் மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**எஸ்.எல்.ஆர்.ஜயநாயக்க,**
**தெரிவத்தாட்சி அலுவலர்**
**புத்தளம் மாநகர சபை.**

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
**புத்தளம்,**
2026,யூலை 17.

EOG 07 - 0255